4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.
**அ.வ.எண். 933/2023 நாள்: 17.03.2026 வா.சா.1– சேனாதிபதி**

**சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வேறு தொழில் எதுவும் நான் செய்யவில்லை. இதற்கு முன்பு நான் கோழிபண்ணையில் கோழி வளர்க்கும் தொழில் செய்து வந்தேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியும். நான் இந்த வழக்கில் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்ற விவரம் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. நான் செந்தில்குமார் என்பவருக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி செந்தில்குமார் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் என்ன விவரங்கள் சொல்லியுள்ளார், என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. நான் இந்த வழக்கை செந்தில்குமார் என்ற தனிப்பட்ட நபர் மீது தான் தாக்கல் செய்துள்ளேன். நான் எந்த நிறுவனத்துடனும் சேர்த்து செந்தில்குமார் மீது இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் செந்தில்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்த கிரைய தொகை கிடைக்காததால் சொத்துக்கள் திரும்ப கிடைக்க வேண்டும் என்று நான் வழக்கு செய்யவில்லை, கிரைய தொகைக்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் செந்தில்குமாருக்கு ரூ.10 லட்சத்திற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளேன். மேற்படி கிரையத்தை எங்கு வைத்து எந்த தேதியில் ஏற்படுத்தி கொடுத்தேன் என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். கிரையம் எங்கு வைத்து எப்போது பேசப்பட்டது என்ற விவரத்தை நான் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நான் செய்து கொடுத்த கிரைய ஆவணத்தை

தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் எங்கு வைத்து எந்த தேதியில் எப்போது செந்தில்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்ற விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சாட்சி சொல்லவில்லை என்று கூறுகிறார். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பாக நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை நான் எப்போது தாக்கல் செய்தேன் என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் தாக்கல் செய்த இந்த வழக்கு செய்த பிறகு திருப்பப்பட்ட விவரம் எனக்கு தெரியாது, அது சம்பந்தமாக நான் எனது வழக்கறிஞரிடம் கேட்டும் தெரிந்து கொள்ளவில்லை. பிரதிவாதியிடமிருந்து நான் எதனடிப்படையில் நான் ரூ.10 லட்சம் கோருகிறேன் என்றால் சாட்சி கிரைய தொகையில் காசோலையாக ரூ.10 லட்சம் எனக்கு கொடுத்தார், அதில் பணமில்லை என்று திரும்ப வந்ததால் நான் மேற்படி தொகை கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் செந்தில்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்துக்களின் சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. நான் செந்தில்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்த சொத்தின் விஸ்தீரணம் 2.61 ஏக்கராகும். மேற்படி கிரையம் கொடுத்த சொத்தின் கிரைய தொகையில் ரூ.10 லட்சம் எனக்கு வரவில்லை என்று தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி விவரங்களை சொல்லியும், அளவையும் சொல்லி தான் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி செந்தில்குமார் கிரைய தொகைக்காக கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்று எனக்கு தெரியாது. மேற்படி காசோலையை நான் பார்க்கவில்லை என்றால் பார்த்தேன், அது நிரப்பப்படாமல் இருந்தது என்று சாட்சி கூறுகிறார். மேற்படி காசோலை என்ன தேதியில் கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை நான் என்னுடைய வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். இந்த வழக்கில்

எத்தனை சான்றவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது, அது என்ன ஆவணங்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். என்ன ஆவணங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்ற விவரம் எனக்கு ஞாபகம் இல்லை. செந்தில்குமார் கொடுத்ததாக சொல்லப்படும் காசோலையின் எண் என்னவென்று எனக்கு தெரியாது. நான் செந்தில்குமாருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை. மேற்படி கிரைய ஆவணத்தில் யார் யார் கையொப்பம் இட்டுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி செந்தில்குமார் எனக்கு கொடுத்த காசோலை கனரா வங்கியின் காசோலையாகும். மேற்படி காசோலை செந்தில்குமாருக்கு வங்கியிலிருந்து வழங்கப்பட்ட தனிப்பட்ட காசோலையா என்றால் சாட்சி அது சுபம் பவுல்ட்ரி பார்ம் என்ற நிறுவனத்தின் காசோலை என்று கூறுகிறார். மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்மின் காசோலையில் கையொப்பம் செய்யும் அதிகாரம், வங்கி வரவு செலவை நிர்வகிக்கும் அதிகாரம் என்னிடம் தான் இருந்தது என்றால் சரிதான், நான் மேற்படி அதிகாரம் கிரையம் கொடுப்பதற்கு முன்பாக இருந்தது, அதன் பின்பு இல்லை என்று சாட்சி கூறுகிறார். நான் மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்மின் வங்கி நிர்வகிக்கும் பொறுப்பும், காசோலை வழங்கும் பொறுப்பும் எனக்கு வேண்டாம் என்று நான் வங்கிக்கு கடிதம் எதுவும் வழங்கவில்லை என்றால் சரிதான். தற்போது மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்மின் வங்கி கணக்கை நிர்வகிக்கும் மற்றும் காசோலை வழங்கும் அதிகாரம் யாரிடம் உள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்மில் நான் நிர்வாக பங்குதாரராக இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்மின் நிர்வாக பங்குதாரராக உள்ள விவரத்தை வழக்குரையிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ நான் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்மின் 178, பூளவாடி ரோடு, துங்காவி என்ற முகவரியில் தான் இருக்கிறதா என்றால் சாட்சி முன்பு இருந்தது, தற்போது எங்குள்ளது என்று எனக்கு தெரியாது. மேற்படி முகவரி எனது வீட்டு முகவரி என்றால்

சரிதான். மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்ம் நிறுவனம் தற்போது கலைக்கப்பட்டுவிட்டது. எந்த தேதியில் கலைக்கப்பட்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி நிறுவனம் கலைக்கப்பட்டதற்கு நான் எந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி செந்தில்குமாரிடம் எந்த தேதியில் கிரைய தொகையை திருப்பி கேட்டேன் என்று குறிப்பிட்டு வழக்குரையிலோ, முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி காசோலை நிரப்பப்படாத வெற்று காசோலை என்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு 1 மாதம் கழித்து எனக்கு தெரியவந்தது. நான் செந்தில்குமார் மீது இரண்டு வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். நான் செந்தில்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்படும் இடம் கிரைய தேதியில் காலியிடமா அல்லது சுபம் பவுல்ட்ரி பார்ம் என்ற நிறுவனத்தின் கட்டிடம் இருந்ததா என்றால் சாட்சி மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்மின் கட்டிடம் இருந்தது என்று கூறுகிறார். 2008 ம் ஆண்டு முதல் நான் கிரையம் செய்து கொடுத்த சொத்தில் கோழிப்பண்ணை கட்டிடமும், காலியிடமும் இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் மேற்படி கட்டிடத்தில் கோழிப்பண்ணை இயங்கி வருகிறது என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்ம் என்ற நிறுவனத்தை நான் தரப்பினராக இந்த வழக்கில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்ம் நிறுவனம் ஒரு பங்குதாரர் நிறுவனம் என்றால் சரிதான். நான் தனிப்பட்ட முறையில் செந்தில்குமார் என்ற தனி நபருக்கு சொத்தை கிரையம் செய்து கொடுத்த காரணத்தினால் தான் மேற்படி சுபம் பவுல்ட்ரி பார்மை தரப்பினராக நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் செய்து கொடுத்ததற்கான பட்டா, சிட்டா ஆகிய ஆவணங்கள் சுபம் பவுல்ட்ரி பார்ம் நிறுவனம் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் செய்து கொடுத்த பிறகு எத்தனை வருடங்கள் கழித்து கிரைய தொகையின் பாக்கி வரவில்லை

என்ற விவரம் எனக்கு தெரியவந்தது என்றால் வழக்கு தாக்கல் செய்த ஒரு வருடத்திற்கு முன்னால் தான் எனக்கு தெரிய வந்தது என்று சாட்சி கூறுகிறார். நான் கிரையம் செய்து கொடுத்த தேதியிலிருந்து இந்த வழக்கு தாக்கல் செய்யும் வரை பிரதிவாதி செந்தில்குமாரை சந்தித்துள்ளேன், பேசியும் உள்ளேன். நான் முதல் கிரையம் செந்தில்குமாருக்கு ஏற்படுத்தி கொடுத்த பிறகு 2வது கிரையத்தை மேற்படி செந்தில்குமாருக்கு எந்த தேதியில் ஏற்படுத்தி கொடுத்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. இரண்டாவதாக செந்தில்குமாருக்கு பெயருக்கு ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஆவணத்தை நான் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது, எனக்கு ஞாபகம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். நான் செந்தில்குமார் மீது இரண்டாவதாக தாக்கல் செய்துள்ள வழக்கில் என்ன என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு தெரியாது. இரண்டாவதாக தாக்கல் செய்த வழக்கிற்கு முன்பாக மேற்படி செந்தில்குமாருக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை. இரண்டாவது வழக்கு சம்பந்தப்பட்ட காசோலை எண்ணை நான் மேற்படி வழக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் சாட்சி தெரியாது என்று கூறுகிறார். மேற்படி வழக்கிலுள்ள காசோலையை நான் பார்த்துள்ளேன். மேற்படி காசோலையை எங்கு வைத்து பார்த்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. அசல் வழக்கு எண்.934/2023 வழக்கில் என்ன சங்கதிகள் குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சாட்சி செந்தில்குமாருக்கு கிரையம் செய்து கொடுத்த பிறகு கிரைய தொகை வரவில்லை என்று கூறுகிறார். மேற்படி வழக்கில் செந்தில்குமார் என்ன எதிர்வாதம் தெரிவித்துள்ளார், என்ன ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி வழக்கில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் என்ன சொல்லியுள்ளேன் என்று எனக்கு தெரியாது என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். மேற்படி வழக்கில் என்ன ஆவணங்கள் என் சார்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று

எனக்கு தெரியாது என்றால் சரிதான். இரண்டாவதாக கிரையம் செய்து கொடுத்த ஆவணத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தில் யார் யார் சாட்சிகள் என்று எனக்கு தெரியாது என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் இரண்டாவதாக கிரைய செய்து கொடுத்த சொத்தின் புல எண்கள் என்ன என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது, சாட்சி தற்போது ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் இரண்டாவது செய்து கொடுத்த கிரைய ஆவணத்தின் சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி சொத்து சம்பந்தப்பட்ட சொத்துக்களை இந்த வழக்கில் நான் தெரிவித்துள்ளேனா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் தனிப்பட்ட முறையில் நான் தான் விவரம் சொன்னேன். நான் தற்போது சாட்சிய விவரத்தின் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கறிஞரிடம் சொன்ன விவரங்கள் முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதா, வழக்குரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் தாக்கல் செய்துள்ள இரண்டு வழக்குகள் பற்றிய விவரங்கள் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை என்றால் சரிதான்.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.03.17 16:54:30 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.